Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

மலர் 2 ★ மட்டக்களப்பு ★ 1970 - ஆனி ★ விலை 25 ★ இதழ் 5

# இவ்வருடம் எமக்கு ஒரு யூபிலி வருடம்

**"இந்த வருடம் எமது மேற்றிராசனத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வருடம் - இது எமக்கு ஒரு யூபிலி வருடம். கார்த்திகைத் திங்களில் இயேசுசபைக் குருமார் நமது மேற்றிராசனத்தைப் பொறுப்பேற்றதன் 75வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடப்போகின்றோம்"** என்று மட்டக்களப்புக் கத்தோலிக்க இளைஞர் மாநாட்டில் தலைமை உரை நிகழ்த்திய துணை ஆயர் அவர்கள் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறியதாவது............

இம் (மே) மாதம் 10ந் திகதி சமூகத் தொடர்புச் சாதனங்களின் உலக தினம் கொண்டாடப்பட்டபோது நம் பரிசுத்த தந்தை 6வது சின்னப்பர் "**சமூக தொடர்புக் கருவிகளும் இளைஞரும்**" என்ற விடயம்பற்றி ஒரு செய்தி விடுத்திருந்தார். அதில் இளைஞரின் எதிர்காலம்பற்றி இரு கேள்விகளை எழுப்பினர்:

1. இன்று உருவாகிவரும் உலகில் இளைஞர் எவ்வாறு வாழப்போகின்றார்கள்?
2. இளைஞரே, உலகை ஆளும் பொறுப்பை நீங்கள் ஏற்றபின், எத்தகைய சமுதாயத்தை நீங்கள் உருவாக்கப்போகின்றீர்கள்?

இந்த இரு கேள்விகளும் மிகவும் முக்கியமானவை.

மட்டக்களப்புப் பிராந்தியத்தின் கத்தோலிக்க இளைஞர் முதல்முறையாகக் கூடி மகாநாடு நடத்தும் இத்தருணத்தில் அதே கேள்விகளை அவர்களுக்குப் பொருத்தமாக மாற்றிக் கேட்பது நன்றென எண்ணுகிறேன்:

1. இன்று உருவாகிவரும் புதுத் திருச்சபையில் கத்தோலிக்க இளைஞர்களாகிய நீங்கள் என்ன இடம் வகிக்கப்போகிறீர்கள்?
2. நீங்கள் பெரியவர்களாகி பொறுப்புக்களை ஏற்றபின், எத்தகைய திருச்சபையை உருவாக்கப்போகிறீர்கள்?

[3ம் பக்கம் பார்க்கவும்]

**"திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## 15. அன்பின் திருப்பலி - பூசைப்பலி

ஆதிமனிதன் தான்செய்த பிழையினால் (சென்ம பாவம்) இறைவனுடன் இருந்த அன்புப்பிணைப்பை இழந்தான். அதனால் இறைவனோடு இன்பமாய் வாழும் பெரும்பேற்றை இழந்தான். இந்த இழப்பு அவன் வழிவந்த மனுக்குலம் முழுவதையும் சார்ந்தது. இந்த நிலையிலேயே மனிதன் விடப்பட்டிருந்தால், அவனது நிலை என்னவாகும்? நித்திய இன்பவாழ்வு வெறும் பகற்கனவாகக் கூட இருந்திருக்கமுடியாது.

இறைவன் இந்தத் துர்ப்பாக்கியமான நிலையில் மனிதனை விடவிருப்பவில்லை. அவரது அன்பு அளப்பரியது. தம்மோடு இணைத்துக் கொள்ளவே அவர் விரும்பினார். பின்வந்த மனுக்குலம் தன் நிர்ப்பாக்கிய நிலையை எப்படியோ எண்ணியிருக்கவேண்டும். தனக்கொரு தலைவன் உண்டு. அவன்தான் சர்வ சக்திவாய்ந்த ஈசுவரன். மனிதன் இறைவனோடு இணைந்திருக்கவேண்டும். அறுந்துபோன அன்புப்பிணைப்பை, நட்புத் தொடர்பை மீண்டும் இணைக்கவேண்டும். அவரோடு ஒன்றித்திருக்கவேண்டும் என்று எண்ணினான். இதற்கு என்ன வழி?

இறைவனுக்கு இசைந்த – இசைந்ததென அவன் நம்பிய – பலிகளை ஒப்புக்கொடுத்து வழிபட்டு, இறைவனைச் சமாதானப்படுத்தி நட்புறவுகொள்ளத் துணிந்தான். இது மனித இயல்பு. இதன் காரணமாகவே பலவித பலிகள் தோன்றின. பாவப்பரிகாரப்பலி, இரத்தப்பலி, சர்வதகனப்பலி முதலியன. ஆடு, மாடு, கோழி, புறு, பழங்கள், நெய் என அவன் விரும்பிய எதையும் பலியாகக் கொடுத்தான், வழிபட்டான். இறைவன் இவற்றை விரும்பிக்கேட்டார்: அவற்றை மகிழ்ந்து ஏற்றுக்கொண்டார். (யாத்திரா கமம் 30:1:46 காண்க.)

ஆபிரகாம். ஈசாக்கு, யாகோப்பு, மெல்கிசதேக் மோசேசு எல்லாத் தலைவர்களும் இவ்வகைப் பலிகளை ஒப்புக்கொடுத்தார்கள். தம் உடன்படிக்கையை (பழைய) நிறைவேற்றினார்கள். கிறிஸ்துநாதர் புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தினார். இறைவனுக்குத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். இவ்வளவு நெடுங்காலமாகப் பெற முடியாதிருந்த இறைவனின் நட்பை - மனிதனின் மீட்பை - இப்பலி பெற்றுக்கொடுத்தது; எல்லையற்றதோர் வெற்றி. ''இவர் நமது பிரிய மகன் இவரில் பூரண அன்பு எமக்குண்டு'' என்று கூறிய பரமதந்தை, மகன் கொடுத்த பலியை ஏற்றுக்கொள்ளாதிருப்பாரா?

''இதை என் ஞாபகமாகச் செய்யுங்கள்'' (லூக்காஸ் 22 22:19) என்று கூறித் தம் பின்னுரித்தாரிடம் கையளித்தார். அன்று கல்வாரியில் கொடுக்கப்பட்ட அதே அன்பின் திருப்பலி, இன்று அனைத்துலகிலும் நாள்தோறும் கொடுக்கப்படுகிறது. இதுவே பூசைப் பலி. இதிலேதான் ''அவர் மூலமாக, அவரோடு அவரில் தூய ஆவியின் ஐக்கியத்தில் எல்லாம் வல்ல இறைவனுக்கு எல்லாப் புகழும்மாட்சியும்'' பூரணமாக அளிக்கப்படுகின்றது.

— பொ. இராமலிங்கம் —

பூசையில் நிகழ்வது என்ன....?

அன்று கல்வாரியில் யேசு, தாம் இருந்த நிலையில் மனித உடலில் தம்மை ஒப்புக் கொடுத்தார். பூசையில் இன்று தாம் உள்ள நிலையில் மறையுடலில் (Mystical Body) தம்மை ஒப்புக்கொடுக்கிறார்! அவரே பலிப் பொருள். நாம் எல்லோரும் திருமுழுக்கின் மூலம் அம்மறையுடலின் உறுப்புக்கள். எனவே, நாம் கிறிஸ்துவின் உறுப்புக்கள். மறையுடல் பலியாகும்போது உறுப்புக்கள் விலகிநிற்க முடியாது. ஆகவே பலிப்பொருள் கிறிஸ்து மட்டுமல்ல நாமும் சேர்ந்து முழுமறையுடல். ''நானே திராட்சைச் செடி; நீங்கள் அதன் கொடிகள்'' (அருளப்பர் 15:1) ஆகவே, நாம் கிறிஸ்துவுடன் ஒன்றித்து ஒப்பளிக்கிறோம் என்பதை மிக முக்கியமாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

(4ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இவ்வருடம் எமக்கு ஒரு............

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த பத்து ஆண்டுகளாகத் திருச்சபையில் மாபெரும் மாற்றங்கள் நடந்தேறி வந்துள்ளன; இன்றுமே மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் கத்தோலிக்க இளைஞர்களாகிய உங்கள் நிலை என்ன? நீங்கள் எவ்வாறு வாழப்போகிறீர்கள்? நீங்கள் பெரியவர்களாகித் திருச்சபையில் வளர்ந்த பொதுநிலையினருக்குரிய பொறுப்புகளை ஏற்றபின், திருச்சபையில் எவ்வாறு தொண்டாற்றப் போகிறீர்கள்? எத்தகைய திருச்சபையை உருவாக்கப்போகிறீர்கள்? இவ்விடயங்கள்பற்றி சிந்தித்து, கலந்துரையாடி, உங்களை நன்றாக ஆயத்தப்படுத்திக்கொள்தல் அவசியம்.

75 ஆண்டுகட்குமுன் இயேசு சபைக் குருமார் நம் மேற்றிராசனத்தைக் கையேற்றபோது இரண்டு பங்குகள்தான் – மட்டக்களப்பும் திருகோணமலையும் – இருந்தன. இந்த இரு பங்குகளிலும் ஏறக்குறைய 5000 கத்தோலிக்கர். இன்று, 75 ஆண்டுகட்குப்பின், 20க்கு அதிகமான பங்குகளும், ஏறக்குறைய 35,000 கத்தோலிக்கரும், ஏறக்குறைய 35 சுதேச குருக்களும் உண்டு. இயேசு சபைக் குருமார் செய்த அரும்பெரும் தொண்டின் பயனாக இளைஞராகிய நீங்கள் பெருந்திரளாக இன்று இங்குவந்து கூடியிருக்கிறீர்கள். இனி வருங்காலத்தைப்பற்றிச் சற்றுச் சிந்திப்போம்.

ஐம்பது ஆண்டுகட்குப்பின் எம் மேற்றிராசனம் என்ன நிலையிலிருக்கும்? பங்குகளின் தொகையும், கத்தோலிக்க மக்களின் தொகையும் **ஐந்து மடங்கென்றாலும்** பெருகிவிடும். இவர்களுக்கு ஞானப்பணி புரிவதற்கு வேண்டிய குருக்களும் துறவிகளும் எங்கிருந்து வரப்போகிறார்கள்? இளைஞராகிய உங்கள் மத்தியிலிருந்துதான். அவர்கள் மட்டும் பணிபுரிந்தால் போதுமா? போதாது. அவர்கட்குப் பக்கப்பலமாக நின்று பொதுநிலையினரும் தொண்டாற்றவேண்டும். அப்போதுதான் திருச்சபை வளர்ச்சியுற முடியும். ஆகவே. வருங்கால திருச்சபையை எமது மேற்றிராசனத்தில் உருவாக்கும் பொறுப்பு இன்றைய இளைஞராகிய உங்கள் கையில்தான் உண்டு. இதற்காக நீங்கள் உங்களை இப்போதிருந்தே ஆயத்தப்படுத்தவேண்டும், பயிற்றவேண்டும். இதற்காகத்தான் நீங்கள் இன்று இங்குவந்து கூடியிருக்கிறீர்கள்.

நீங்கள் திருச்சபையில் வகிக்கும் பிரதான இடத்தை நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். உங்கட்கு ஆர்வமுண்டு, துடிப்புண்டு, செயல் திட்டங்களில் ஈடுபட ஆசையுண்டு. ஆனால் இவை மட்டும் போதாது. போதிய அறிவும், அனுபவமும் அவசியம். இவை உங்கள் பெற்றோர், உங்களை வழிநடத்தும் குருக்கள் ஆகிய இவர்களிடம்தான் நிறைவாக உண்டு. ஆகவே, உங்கள் பிரச்சினைகள், கருத்துக்கள், செயல் திட்டங்கள் ஆகிய இவைகளைப்பற்றிக் கலந்துரையாடி, பெரியோரின் வழிநடத்துதலின்கீழ் திருச்சபைக்குப் பணிபுரிய நீங்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

நம் நாட்டுக்கும் திருச்சபைக்கும் நீங்கள் சிறந்த முறையில் பணிபுரிய வேண்டுமாயின், பின்வரும் அடிப்படைத் தத்துவங்களைக் கடைப்பிடித்துச் செயலாற்றவேண்டும்:

1. **நீங்கள் விசுவாசத்தில் வேரூன்றி நிற்கவேண்டும்.** நம் திருமறையின் கோட்பாடுகளை நன்றாக அறிந்துகொள்ளவேண்டும். சிறப்பாக, நீங்கள் திருச்சபையில் வகிக்கும் இடம், ஆற்றவேண்டிய தொண்டுகள் என்பன பற்றித் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும்; அதற்குரிய வழிவகைகளையும் தேடிக்கொள்ளவேண்டும்.

2. **கிறிஸ்துவின் மகிமைப் பெயரைத் தரித்திருக்கும் நீங்கள் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழவேண்டும்.** நீங்கள் ஒவ்வொருவரும் மறு கிறிஸ்துக்களாக வாழவேண்டும். மகா போர் வீரனாகிய அலெக்ஸ்சாந்தர் ஒருமுறை தனது பாசறைகளைச் சடுதியாகப் பார்வையிட வந்தபோது போர்வீரன் ஒருவன் இழிவான முறையில் நடந்துகொண்டதைக் கண்டு, அவனுடைய பெயர் அலெக்ஸ்சாந்தர் என்றறிந்து மனம் வருந்தி அவனுக்குக் கூறியதாவது: "மாபெரும் வீரனாகிய எனது பெயரை இழிவுபடுத்தாதே. இப்பெயரின் மகிமைக்கேற்ப உனது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள், அன்றேல் உனது பெயரை மாற்றிக்கொண்டு பட்டாளத்தைவிட்டு ஓடிப்போ". இக்கூற்று கிறிஸ்தவர்களாகிய எமக்கும் மிகவும் பொருத்தமானது.

3. **உங்கள் ஆற்றல்களையும் திறமைகளையும் கிறிஸ்துவுக்கு அர்ப்பணம் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும்.** இன்று (12ந் திகதி) திருச்சபை **புனிதர் பங்கிராஸ்** என்னும் ஓர் இளைஞரின் திருநாளைக் கொண்டாடுகின்றது. அவர் தமது உயிரையே கிறிஸ்துவுக்கு அர்ப்

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இறைவழிபாட்டுச்........**

[2ம் பக்கத் தொடர்ச்சி]

இனி பலி ஒப்புக்கொடுப்போம்:

இறைவன் சந்நிதி. அங்கு செல்கையில் நாம் கூடியளவு புனிதமாக இருக்கவேண்டியதுதான் முறை, நீதி. சில சிறு குறைகள் (அற்பபாவங்கள்) இருப்பின் அவற்றை நீக்கிக்கொள்ளவேண்டும். அதற்கான வழிகள்:

(அ) ஆலய வாயிலில் இருக்கும் திருநீரைத்தொட்டு பக்தி மனஸ்தாபத்துடன் சிலுவை வரைந்துகொள்வது. திருநீருக்கு பாவக்கறையை நீக்கும் சக்தியுண்டு.

(ஆ) நிறைவான மனஸ்தாபம்.

(இ) கிறிஸ்துவுடன் (குருவுடன்) சேர்ந்து நமது குற்றங்களை வெளியிடுவது. (எல்லாம் வல்ல இறைவனிடமும்........)

நம்மை புனிதமாக்கிக்கொண்டபின் இறைவனுடன் நமது வேண்டுதல்களைச் சமர்ப்பிக்கிறோம். (ஆண்டவரே இரக்கமாயிரும்) அவரைப் புகழ்கின்றோம் (உன்னதங்களில்....) பிராத்திக்கிறோம். (பிராத்திப்போமாக)

இதன்பின் இறைவன் நமக்கு பதில் அளிக்கிறார். நாம்பேச அவர் பேசாதிருப்பதும், அவர் பேச நாம் கேளாதிருப்பதும் இயற்கைக்கு மாறு, அவமரியாதை செய்வது- எப்படி இறைவன் நம்முடன் பேசுகிறார்....?

(அ) நிருபங்கள் வாசிப்பு (இது ஆண்டவரின் அருள்வாக்கு)

(ஆ) நற்செய்தி வாசிப்பு; (புனித அருளப்பர் எழுதிய நற்செய்தித் தொடர்ச்சி....) (இது ஆண்டவரின் அருள்வாக்கு)

(இ) குருவின் (கிறிஸ்துவின்) அருள் வாக்கு. (பிரசங்கம்)

இது முடிந்ததும் நமது அன்பளிப்பு நடைபெறுகிறது. பொற்தட்டில் ஒரு சிறு அப்பம் பொற்கிண்ணத்துள் சொற்ப் இரசம். அதிக பெறுமதியில்லாத அன்பளிப்பு அல்லவா? இல்லவே இல்லை. இச்சிறு பொருட்களை அன்பளிப்பாக ஒப்புக்கொடுக்கும்போது, அதற்குப் பெரும் கருத்தும், மதிப்பும் அளிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் உடலும், இரத்தமும் அத்துடன் நமது இரத்தமும், உடலுமே அங்கு அளிக்கப்படுகிறது. இந்த அன்பளிப்புக்கு அளவும், பெறுபதியும் மதிக்கமுடியுமா? சரி நமது அன்பளிப்பு முடிந்தது.

நமது அன்பளிப்பைப் பெற்றுக்கொண்டு அவர் வாளாவிருந்தால் அது அழகா? நீதியா? நாம் நமது நண்பனுக்கு அளிக்கும் சிறு அன்பளிப்பில் (சொக்லேட் பெட்டி, விஸ்கோத்து பெட்டி) நமக்கும் திருப்பித்தரமாட்டானா? தருவது வழக்கம். அதுதான் பரிமாற்றம். அதுபோலவே இறைவனும் தாம் பெற்ற அன்பளிப்பில்–பலிப்பெருளில் ஒரு பகுதியை நமக்குத்தருகிறார். ''பெற்றுக்கொள்ளுங்கள் இது உயிர், ஆன்ம பானம்'' என்கிறார். நமது பலியில் அவருக்கு சந்தோஷம். அச் சந்தோஷத்தில் கலந்துகொள்ள நம்மை அழைக்கிறார். நம்மில் எத்தனைபேர் இதற்கு மறுக்கிறோம். ''ஆண்டவரே இன்று எனக்கு வசதியில்லை இன்னொரு நாள் பார்ப்போம்'' என்று கூறிவிடுகிறோம். நாம் கொடுக்க அவர் ஏற்றுக்கொள்ளுகிறார்; அவர் தர நாம் மறுக்கிறோம். இது மரியாதையா....? இறைவனுக்கு நாம் காட்டும் பெருமதிப்பா....?

''நான் அன்புக்கரம் நீட்டி உனது அன்பளிப்பை - பலியை ஏற்றேன். நீ நான் தருவதை மறுத்துச் செல்கிறாயே'' என்று துக்கப்படமாட்டாரா? இதிலிருந்து பலி ஒப்புக் கொடுக்கும் அனைவரும் (தகுதியற்றவர்–திருச் சபைக்குப் புறம்பானவர்கள், அருள்நிலையில் இல்லாதவர்கள் தவிர) திருவிருந்தில் கலந்து கொள்வதுதான் சரி, நீதி, மரியாதை, கௌரவம், நன்றியுடமை என்பது எளிதில் விளங்கும்.

இத்திருவிருந்தில் கலந்துகொள்ளாமைக்குப் பல காரணங்களுண்டு. ஓரளவு அறியாமை, விளங்காமை. திருப்பலி ஆரம்பத்திலேயே நம்மைத் திருப்பலி ஒப்புக்கொடுக்கத் தகுதியுடையோராக்கிக் கொண்டால் அற்ப பாவங்கட்கு மன்னிப்புப் பெற்றுவிட்டால்' (இதற்குக் கட்டாயம் பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டும் என்பது இல்லையே) இறைவன் தரும் அருங்கொடையை, நற்கருணை விருந்தைப் பெற்று அனுபவிக்க ஏன் தயங்க வேண்டும்....?

திருப்பந்திக்குச் செல்லாமல் வாளாவிருக்கும் அத்தனைபேரும் அருள் நிலையில் இல்லாதவர்கள்–சாவான பாவம் செய்தவர்கள் என்ற அர்த்தம் கொள்வதா? கிறீஸ்துவின் மறையுடல் உறுப்புகளாகிய நாம் எல்லோரும் இதனை நன்கு விளங்கவேண்டும். விளங்கி அனுபவித்து எல்லாம் வல்ல இறைவனுக்கு எல்லாப் புகழும் மாட்சியும் அளிக்கவேண்டியது நம் கடமை.

ஈற்றில் இறைவன் தந்த கொடைகளுக்கு நன்றி செலுத்துகிறோம். பிதா, சுதன், தூய ஆவியின் பேரால் குரு நம்மை ஆசீர்வதித்து ''சென்றுவாருங்கள்'' என்று வழியனுப்புகிறார். பலிகொடுத்தோம் அதே பலியில் பங்கு பற்றினோம். இறைவனின் மகிழ்ச்சியும், ஆசியும் பெற்றோம். மனச்சமாதானம். மகிழ்வுடன் வீடு செல்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆண்டுகள் ஏழு ஆகுகின்றன.

இம் மாதம் 21ந்திகதி 6வது சின்னப்பர் பாப்பரசர் ஆகி ஏழு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அன்னாரின் முடி சூட்டு விழாவின் நினைவுதினம் இம்மாதம் 28ந்திகதி உலகெங்கும் கொண்டாடப்படும்.

கடந்த ஏழு ஆண்டுகளிலும் 6வது சின்னப்ப பாப்பரசர் திருச்சபைக்கு அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளார். முதலில் 23வது அருளப்ப பாப்பரசரால் தொடங்கப்பட்ட 2வது வத்திக்கான் பொதுச்சங்கத்தைச் சித்



திகரமாக முடித்துவைத்தார். பின்பு, திருச்சபையின் பல்வேறு துறைகளிலும் புதுப்பித்தலை உருவாக்க, அயராது உழைத்து வந்துள்ளார். சிறப்பாக, இறைவழிபாட்டில் (திருப்பலி, திருவருட்சாதனங்கள், வழிபாட்டு ஆண்டு அட்டவணை என்பனவற்றில்) மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார். கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாப்பதில் கண்ணுங் கருத்துமாய்க் கடமையாற்றி உள்ளார். உலக சமாதானத்தை நிலைநாட்டவும் கிறிஸ்தவர்களிடையே நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் வளர்க்கவும், திருமறைக்குச் சாட்சியமளிக்கவும், பலஸ்தீனம், இந்தியா, வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, போர்த்துக்கால், ஆபிரிக்கா, துருக்கி, சுவிற்சலாந்து முதலிய நாடுகட்குத் தூது சென்றுள்ளார். திருச்சபையின் பணியில் அகில உலக ஆயர்களின் கூட்டுப்பொறுப்பு நடைமுறையில் விளங்கும்படி ஆயர்கள் மன்றத்தின் சாதாரண கூட்டமொன்றும், சிறப்புக் கூட்டமொன்றும் திறம்படநடத்தியுள்ளார்.

இம்மாபெரும் தொண்டுகள் மத்தியில் இன்று திருச்சபையில் தலைகாட்டியுள்ள தப்பறைகள், குழப்பங்கள், குருக்களின் அமைதியற்றநிலை, அழைத்தல்களின் குறைவு முதலிய பிரச்சினைகள் பாப்பரசரின் உள்ளத்தை அதிகம் துன்புறுத்தி வருகின்றன. ஆகவே, இறைவன் அவருக்குப்போதிய சரீர சுகத்தையும், மன உறுதியையும், ஞான வரங்களையும் அளித்து, அவர் இன்னும் பல ஆண்டுகட்குத் திருச்சபைக்கு நற்பணி புரிய அவரைப் பாதுகாத்தருளும்படி மன்றாடுவோம்.

''ஒருவெண் கொற்றக் குடை நிழலில்
உலகாள் வேந்தன் வாழியவே!''

---

**இவ்வருடம் எமக்கு ஒரு........**

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பணித்து வேதசாட்சியாக மரித்தது போல, நீங்களும் உங்களை முற்றாகக் கையளிக்கத் தயாராயிருக்கவேண்டும்.

4. **நற்பணி புரிவதற்கு பெற்றோர் பெரியோரின் வழிநடத்தலின்கீழ் நீங்கள் தகுந்தமுறையில் பயிற்றப்படவேண்டும்.** இது மிகமிக அவசியம். ஏனெனில் தகுந்த பயிர்ச்சியின்றிக் கையாளப்படும் முயற்சிகள் அதிக பலனை அளிக்கமாட்டா.

''அன்பர்பணி செய்ய என்னை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலை தானே
வந்தெய்தும் பராபரமே''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ★ காவிய வாழ்வு ★

வையகத்தின் வரலாற்றை மறுபடியும் மாற்றிஅமைத்த பெருமை கிறிஸ்துவுக்கே உரியது என்பதை கி.மு.-கி.பி. என ஆண்டுகள் வகுக்கப்பட்டிருப்பதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். தனது உதயத்தின் மூலம் உலகத்தின் சரித்திரத்தை மாற்றி விடும் சக்தி ஒருவருக்கிருந்தால் அந்த மகானைப்பற்றி அறிய முயல்வது நயம் தரக் கூடிய செயல் என்பதில் யாருக்கும் மாறுபாடு இருக்கமுடியாது.

நமது கண்ணோட்டத்தை இரு விதத்தில் ஒரு பொருளின்மீது செலுத்தலாம். நுண்காட்டி (Microscope) மூலம் ஏதாவதொரு பொருளை நோக்கினால், நாம் ஒரு சிறு பகுதியை மிக விரிந்த அளவில் அவதானிக்க முடியும். ஆயின், அதே பொருளை தொலை நோக்காட்டி (Telescope) கொண்டு பார்த்தால் அந்தப் பொருளின் வடிவம் அணுவளவும் பிசகின்றி தெளிவாகத் தோன்றும். வழமையாக, நாம் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை நுண்காட்டி கொண்டுதான் பார்க்கிறோம். அவ்விதம் பார்க்கும்போது அவர் வாழ்க்கை ஏட்டில் ஒரு வரியை, வார்த்தையை அல்லது ஒரு நிகழ்ச்சியை மிகப் பெரிய அளவில் காண்கிறோம். மூலவன் யேசு பேசிய ஒவ்வொரு சொல்லும் முக்கியமானதினால் இந்தமுறையிலேயே நாம் அவற்றை அணுகிறோம். குறையில்லா அவரின் வாழ்க்கை ஏட்டைக் கூர்ந்து நோக்கும்போது, நுண்காட்டிக்குப் பதிலாக தொலைநோக்காடியைப் பாவித்து, அதைப்பரந்த ஒரு காட்சியின் அளவில் பார்க்க வேண்டிய சந்தர்ப்பங்கள் நமக்கு ஏற்படுகின்றன. நுண்காட்டி மூலம் நோக்கும் ஒருவர் காட்டைப்பாராது மரத்தைப்பார்ப்பதுபோல, நம் விழி முன்னே விரிந்து தோன்றும். முடிவுறாத கிறிஸ்துவின் காவிய வாழ்வைச் சிறிது கவனித்துப் பார்ப்பதினால் பிரயோசனம் உண்டாகும் என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?

கிரேக்கப் பேரறிஞன் அரிஸ்ரோட்டில் ஒரு முறை நாடக இலக்கியத்தைப்பற்றி பேசும்போது, ஒரு நாடகத்திற்கு, முதல், இடை, முடிவு என மூன்று பகுதிகள் இருக்க வேண்டுமென எடுத்துரைத்தது கிறிஸ்துவின் கறையற்ற காவிய வாழ்வுக்குச் சாலவும் பொருந்துவதாகும். அதாவது, யேசுவின் வாழ்க்கை ஏடு ஆயத்தம் – போராட்டம், அறிதல், துன்பியல். வெற்றி என்னும் அத்தியாயங்களைக் கொண்டது என்பதை நற்செய்திகளை நன்கு கற்றோர் உணர்ந்து கொள்வர்.

எப்போதாவது யேசுவின் வரலாற்றை எழுதப்புகுவோர், தம்மை ஒரு சிக்கல் எதிர் நோக்குவதை அறிவர். அதாவது, இறைமகன் யேசுவின் 33 ஆண்டு கால முழு வாழ்வில் 30 ஆண்டுகளை 'மறைந்த கால வாழ்க்கை' என நமது மறை நூல்கள் இயம்புகின்றன. அவர் பாலனாகவும் பன்னிரண்டாண்டுச் சிறுவனாகவும் இருந்தபோது ஏற்பட்ட இரண்டொரு நிகழ்ச்சிகளை விட வேறு எதைப்பற்றியும் அவருடைய 'மறைந்தகால வாழ்க்கை'யிலிருந்து நாம் அறிந்து கொள்ள இயலவில்லை. ஒருவருடைய வாழ்க்கையின் பெரும் பகுதியைப்பற்றி எதுவும் தெரியாத நிலையில், அவருடைய வாழ்க்கை வரலாற்றை

## எஸ். அரியரெத்தினம்.

எழுதப்புகுவது எவ்வளவு இக்கட்டான காரியம் என்பதை கற்றவரும் மற்றவரும் எளிதில் உணர்ந்து கொள்வர்.

கிறிஸ்துவின் இளமைக் கால வாழ்வைப் பற்றி எதுவும் அதிகமாகத் தெரியாவிட்டாலும், அக்காலத்தில் என்ன நடந்திருக்கலாம் என்று நாம் உய்த்துணரக் கூடுமன்றோ.?

## நாடும் ஏடும்

பாலனாக இருக்கும்போது பரமனாகியயேசு தாம் வாழ்ந்த நசரேத்தூரில் இருந்த தொடக்கப்பள்ளியொன்றில் கல்வி கற்பதற்காக அனுப்பப்பட்டார். உலக வரலாற்றில் எந்த ஒரு மனிதனும் வகிக்காத ஓர் உயர்ந்த இடத்தைப் பெற இருக்கும் சிறுவனாகிய யேசு ஒரு சாதாரண ஆசிரியரிடம் கல்வி பயிலச் சென்றார். இந்த ஆசிரியன் பெயர் நமக்குத் தெரியாவிட்டாலும், அவர் இறை

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**காவிய வாழ்வு..........**

[6ம் பக்கத் தொடர்ச்சி]

மகனுக்கு ஏற்ற அறிவை ஊட்டினர் என்பதில் எவருக்கும் சந்தேகம் வேண்டா. ஆம்! கையிலே ஏடும் எழுத்தாணியும் சுமந்து கடவுளின் மகன் கல்விக்கூடம் சென்றார். அச்சகமும் நூல்களும் இல்லாத அக்காலத்தில் ஓலைச் சுருள்களில் எழுதியே மாணவர்கள் தங்கள் பாடங்களைக் கற்றுவந்தனர். இந்த ஓலைச் சுருள்கள் மிகவும் விலையேறப்பெற்றனவையாக இருந்ததினால், அவற்றை எவராலும் சொந்தமாக வாங்கிக்கொள்ள முடியவில்லை. எனவே, பள்ளிக்கூடத்தில் கற்பிப்பதையெல்லாம் மனப்பாடம் செய்ய வேண்டியவர்களாக இருந்தார்கள் மாணவர்கள்.

யூதகுலத்தைச் சேர்ந்த ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடத்தில் பின் வரும் ஐந்து முக்கிய பாடங்களைப் படிக்க வேண்டும்.

1. செபக் கூடங்களில் இறைவழிபாட்டைத் தொடங்குவதற்காக உபயோகிக்கப்படும் யூத மறைக் கொள்கையை (Shema) முறையாகக் கற்கவேண்டும். (Shema) என்பது கீபுரு மொழியில் தவிர்க்க முடியாத ஒரு வினைச்சொல்லாகும். '**கேள்**' என்னும் பொருளுடைய இதுவே யூத மறை நூலின் முதல் சொல்லாக விளங்குகிறது. (உ + ம், கேள் ஓ, இஸ்ராயலரே, உங்கள் தலைவனாகிய ஆண்டவர் உங்களுடைய ஒரே இறைவனாகும். ஆததால் அவரை முழு இதயத்தோடும் ஆத்துமத்தோடும், சக்தியோடும் நேசிப்பீர்களாக. என்பதாம்)

2. Hallel என்னும் வணக்கப்பாடலாகும். இதில் 113 தொடக்கம் 118 வரையுமுள்ள பாடல்கள் பரமனை அதிகமாகப் புகழ்ந்து பாடிப்பரவுகின்றன.

3. 'Genesis' என்னும் மனித இனத்தின் தொடக்கவரலாறாகும். இதில் முதல் இருந்து ஐந்து வரையுமுள்ள கதைகளில் உலகம் படைக்கப்பட்டவிதமும் தேசங்கள் உருவான முறையும் சொல்லப்படுகின்றன.

4. 'Leviticus' என்று கூறப்படும் சட்டமாகும். இச்சட்டம் எது தூய்மை, தூய்மையற்றது, தொடக்கூடியது, தொடக்கூடாதது என்று பகுத்துக் கூறுவதோடு, எதை உண்ணலாம் உண்ணக்கூடாது என்றும் எடுத்துரைக்கின்றது. மேலும் ஒரு மனிதன் எப்படி சட்டத்தின்படி தூயவாழ்வு வாழலாம் என்றும் சொல்லுகின்றது.

5. மாணவர்கள் எல்லாரும் தங்களது கல்வி சம்பந்தமான சுயமுயற்சியில் ஈடுபடுவதற்காக வெளியில் அனுப்பப்படுவர். சொந்த நூல்கள் இல்லையெனினும், இதன் பொருட்டு பள்ளிக் கூடங்களில் பாவிக்கப்படும் ஓலைச் சுருள்களை (Rolls) வாங்கிப் படிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

ஒருவர் பெயரின் முதல் எழுத்தைத் தொடக்கமாகவும், இறுதி எழுத்தை முடிவாகவும், இடை எழுத்துக்களை இவ்விரண்டுக்கும் இடையில் வரக்கூடியதாகவும் வைத்து அமைக்கப்படும் ஒரு வாக்கியத்தையே "**சுய முயற்சி**" என்று சொல்வர். இப்பணியில் ஈடுபடுபவர்களின் இதயங்கள் பூரிக்கும் படிக்கு ஆசிரியர்கள் ஏற்ற பரிசளித்துச் சிறப்பிப்பது அக்கால வழக்கமாகும்.

இன்றுபோல் அன்று எழுதுகோலும் தாளும் இல்லாததினால், கற்பலகையில் வெண்கட்டிகொண்டு எழுதினர். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் எழுத்துக்களை தேனும் மாவும் கலந்து எழுதி யாராவது ஒரு மாணவரிடம் 'அது என்ன எழுத்து' என்று கேட்பதும், வினவுக்கு சரியான விடை சொல்லும் அம் மாணவன் கற்பலகையில் உள்ள எழுத்துக்களை நாவால் நக்குவதற்கு அனுமதிக்கப்படுவதும் அன்றைய முறையாகும். இதையே அக்காலத்தில் எழுந்த சங்கீதங்களைப் பாடியவர்களும் 'தேன் கூட்டிலிருந்து எடுக்கப்படும் தெளிதேனைவிட சொற்கள் மிகவும் சுவையாக இருக்கின்றன' என்று கூறிப்போந்தனர்.

கல்வி, அறிவு வளர்ச்சிக்கான ஆயத்தங்களைப் பெற்றிருந்தது போலவே, உலகவாழ்வுக்கு வேண்டிய முன்னேற்பாடுகளையும் யேசு செய்துவந்தார். பெரும் பாலான மக்களின் எண்ணப்படி பலஸ்தீனநாடு எப்பக்கமும் ஓடாது தேங்கிக் கிடக்கும் ஒரு குளத்தைப் போன்றதாகும். இது வடக்கிருந்து தெற்கே 126 மைலும் கிழக்கிருந்து மேற்கே 46 மைலும் தூரமுள்ள ஒரு சிறிய நாடாக விளங்குகிறது. ஆனால் எந் நாட்டிற்கும் செல்ல கூடிய ஒரு பதையாகத் திகழ்வதே பலஸ்தீனத்தின் தனிப்பட்ட சிறப்பாகும்.

சரிவான மலைகள் நிறைந்துள்ள நசரேத்தில் வாழ்ந்த யேசு, அவ்வூருக்குப் பின்னால் உள்ள மலைகளில் ஏறியிருப்பாரானால், எகிப்தில் இருந்து, ஆரம்பித்து வலது கரையோரமாகவந்து, கலிலேயாக் கடலைத்தாண்டி டமாஸ்கஸ், சீரியா, தூர கிழக்கு முதலான நாடுகளுக்குச் செல்லும் சாலையைப் பாத்

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாகக்கோட்டைக்கு வாழ்வளித்த வள்ளல்

"பூச்சி"

இலங்கையில் புனித பதுவை அந்தோனியார் பெயர்கொண்ட ஆலயங்களுள் வாகக்கோட்டையிலுள்ள ஆலயம் சரித்திரப் பிரசித்திபெற்று விளங்குகின்றது. கலேவலைக்கும் மாத்தளைக்குமிடையிலுள்ள சிறு மலைத்தொடரில் அமைந்துள்ள வாகக்கோட்டை, இலங்கைத் திருச்சபைச் சரித்திரத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஏனெனில், இக்கிராமத்தில்தான் போர்த்துக்கேயரின் வழித்தோன்றல்களாகிய கத்தோலிக்கர் பௌத்தர்களால் சூழப்பெற்று, பல வழிகளில் துன்புறுத்தப்பட்டு, குருமாரின் உதவியின்றித் தவித்தபோதிலும். புனித அந்தோனியாரின் பாதுகாவலின்கீழ் தங்கள் விசுவாசத்தைப் பல தலைமுறைகளுக்குப் பழுதின்றிப் பாதுகாத்தார்கள். இவ்வரலாற்றின் சுருக்கம் பின்வருமாறு :—



போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டகாலத்தில் கண்டி அரசனால் கைதுசெய்யப்பட்ட போர்த்துக்கேய படைவீரர் வெயுடா, கலுகல்ல, வாகக்கோட்டை முதலிய இடங்களில் குடியேற அனுமதி அளிக்கப்பட்டனர். ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றியபின், அவர்களால் துன்புறுத்தப்பட்ட போர்த்துக்கேயர்கள் கண்டி இராச்சியத்திற்குள் தஞ்சம்புகுந்து முன் கூறிய இடங்களில் குடியேறியிருந்த போர்த்துக்கேயரோடு கூடிவாழ்ந்தனர்.

ஞான மேய்ப்பர்களின்றித் தவித்த இலங்கைக் கத்தோலிக்க மக்களுக்கு ஞானப் பணி புரியவந்த யோசவ் வாஸ் முனிவர் கண்டி அரசனின் பாதுகாப்பையும் ஆதரவையும் பெற்றமையால், அந்த இராச்சியத்தில் வாழ்ந்த கத்தோலிக்கரை எவ்வித தடையுமின்றித் தரிசித்து ஞானப்பணி புரிந்துவந்தார். இவ்வாறு வாகக்கோட்டையையும் அவர் தரிசித்தார். இந்தநிலை 1743 வரை நீடித்திருந்தது.

ஆனால், 1739ல் நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த சிறி விஜய இராசிங்கன் கண்டி அரசனானபோது கத்தோலிக்கருக்கு எதிராகக் கலாபனை எழுப்பப்பட்டது. 1743ல் கத்தோலிக்க குருக்கள் கண்டி இராச்சியத்திலிருந்து துரத்தப்பட்டனர். கண்டியிலும் வேறு இடங்களிலுமிருந்த ஆலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. போர்த்துக்கேயர் குடியேறியிருந்த இடங்களிலிருந்து துரத்தப்பட்டு, பல இன்னல்களை அனுபவித்தபின், ஈற்றில் வாகக்கோட்டையை அடைந்து அங்கு தங்கினர். இது கண்டியிலிருந்து தூரத்திலும் ஒதுக்கான இடத்திலும் இருந்தமையால், அதிகாரிகள் அவர்களை இங்கு துன்புறுத்தாமல் விட்டுவிட்டனர்.

பின்பு கண்டியில் கொள்ளை நோயும் பெரும் பஞ்சமும் ஏற்பட்டது. கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியது இவற்றிற்குக் காரணமாயிருக்கக்கூடுமென்று அஞ்சிய அரசன், கண்டியிலிருந்த கோயில் இடிக்கப்பட்டபோது காப்பாற்றப்பட்ட சுரூபங்களை வாகக்கோட்டைக் கிறிஸ்தவர்களிடம் ஒப்படைத்தான். இவைகளுள் ஒன்று புனித அந்தோனியாரின் சுரூபம். வாகக்கோட்டைக் கிறிஸ்தவர்கள் புனித அந்தோனியாரைத் தங்கள் பாதுகாவலராகத் தெரிந்து, அவருக்கு ஒரு ஆலயமும் அமைத்தார்கள். ஆனால் அவர்கட்கு ஞானப்பணி புரிவதற்குக் குருக்கள் கிடைக்கவில்லை. எனினும், கோயில் பணியாளரைத் தங்கள் தலைவராக ஏற்று, ஞாயிறு வாரங்களிலும் வேறு பிரதான தினங்களிலும், ஆலயத்தில் ஒன்றாகக்கூடி, செபமாலை பிராத்தனைகள் சொல்லி யாக்கோமே கொன்சால்வெஸ் சுவாமிகள் எழுதிய சிங்கள நூல்களிலிருந்து வாசித்த வாசகங்களைக் கேட்டுத் தங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்துத் தங்கள் விசுவாசத்தைப் பாதுகாத்து வந்தனர். இந்நிலை ஏறக்குறைய 75 ஆண்டு

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர் இல்லம்

அன்பின் தம்பி, தங்கையர்களே!

## அண்ணாவின் வணக்கம்

உங்களில் சிலர் சென்ற 12ம், 13ம், நாட்களில் நடைபெற்ற மட்டக்களப்பு மாநில கத்தோலிக்க இளைஞர் மாநாட்டில் பங்கு பற்றியிருந்தீர்கள். பங்கு பற்றின சிலர் அண்ணாவிற்கு ஆசிகளும் பாராட்டுக்களும் கூறி கடிதம் வரைந்துள்ளீர்கள். நன்றி! இம் மாநாட்டில் பங்கு பெறாத மற்றயோருக்கு மாநாட்டில் நடந்தவற்றைப் பற்றிச் சுருக்கமாக இவ்வில்லத்தில் கூறியிருக்கின்றோம். தொடர்ந்து உங்கள் இளைஞர் இல்லத்தை நல்ல கதைகளால் கட்டுரைகளால் சிறப்பிக்க வேண்டுமென்பதே எமது வேண்டுதல்.

சென்ற இதழில் அரியண்ணாவின் கருத்துச் செறிந்த கடிதம் ஒன்றினைப் பிரசுரித்திருந்தோம். அவரது கடிதங்களைத் தொடர்ந்து பிரசுரிப்போம்.

திரும்பவும் சந்திக்கும் வரை
அன்புள்ள
''அண்ணா''

## மட்டக்களப்பு மாநில கத்தோலிக்க இளைஞர் மாநாடு

சென்ற மாதம் 12ம், 13ம், நாட்களில் மட்டக்களப்பு மாநில கத்தோலிக்க இளைஞர் மாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதுவே எமது மேற்றிராசன வரலாற்றில் நடைபெற்ற முதல் பிராந்திய கத்தோலிக்க இளைஞர் மாநாடாகும். இருநூற்று ஐம்பதிற்கு மேற்பட்ட இளம் பெண்களும் ஆண்களும் பங்கு பெற்றனர். திருகோணமலை கல்முனை பிராந்தியங்களிலுமிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவை கருத்தரங்கு, பொதுப்பணி கலையரங்கு என்பன சிறப்பித்தன. முதல் நாள் கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி தேசிய-பாப்பரசருடைய கொடிகளை உயர்த்தி விழாவை ஆரம்பித்து வைத்தவர் எமது துணை ஆயர் தவத்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டவர்கள். அவரை வரவேற்று இம் மாநாட்டின் அவசியத்தை விளக்கினார் அருட்திரு. பீற்றர் துரைரெத்தினம். தொடர்ந்து சொற்பொழிவுகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. இம் மாநாட்டில் சொற்பொழிவாற்றினவர் வளர்ந்த பெரியவர்கள் அல்ல, மட்டக்களப்பின் மூன்று பங்கினையும் சேர்ந்த இளைஞர் மூவர், முறையே செல்வன் எஸ். அமலதாஸ், செல்வன். இ. கிறேசியன், செல்வன் எல். அலெக்ஸ்சாந்தர் ''ஏன் இந்தப் பிரச்சினைகள்'' ''இளைஞர் வாழ்வில் சமயம்'' ''வளர்ந்து வரும் புதிய சக்தி'' என்பன அவர்களாற்றிய சொற்பொழிவுகளின் தலைப்புக்கள்.

முற்பகல் 11-45 மணிக்கு எமது ஆயர் தவத்திரு இக்கினேசியஸ் கிளெனி ஆண்டவர்களும் துணை ஆயரும் மற்றும் பத்து குருக்களும் சேர்ந்து கூட்டுப்பலி நிறைவேற்றினர். ஆண்டவர்கள் திருவுரை நிகழ்த்துகையில் பிறர் சேவைதான் ஒரு தலைவனுக்குரிய முதல் முக்கிய இலக்கணம் என்பதையும் ஒவ்வொரு கிறீஸ்தவனுக்குமுரிய தனி அடையாளம் என்பதையும் வற்புறுத்திக் கூறினார். திருப்பலிக்குப்பின்பு மதிய உணவு பார்சல்களாக வழங்கப்பட்டது. தொடர்ந்து கலையரங்கத்தின் சிறப்பு அம்சமாக விவாத மன்றம் இடம் பெற்றது. இளைஞரும் இன்றைய திரைப்படங்களும் என்ற தலைப்பில் தர்க்கத்தினை ஆரம்பித்து வைத்தவர்கள் அருட்திரு அருட்குணநாயகமும் அருட்திரு எஸ். அரியரெத்தினமும். தொடர்ந்து பொது அவையிலிருந்தும் பலர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

எமது இரண்டாம் நாள் காலை பொதுப் பணி செய்வதில் கழிந்தது. தேவ அன்பு தேச அன்பிலும் மிளிர வேண்டும் என்ற வாக்கை மெய்ப்பிக்கவே இளைஞர்கள் இப் பணியில் வெகு உற்சாகத்துடன் இறங்கினர். கடும் வெயிலையும் பாராது நீண்டதொரு வடிகாலை துப்பரவு பண்ணினர். இவ்வடிகால் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலிருந்து ஆரம்பித்து பல தெருக்களையும் ஊடறுத்து கடைசியாக ''ஆவலாதிப்பாலம்'' என்னுமிடத்தில் மட்டக்களப்பு வாவியினுள் விழுகின்றது. இவ் வடிகாலை எம்மக்களும் எம் மாநகரசபை ஊழியரும் சரிவரக் கவனியாமையினால்,தண்ணீர்த் தேக்கத்தினால் நுளம்பு உற்பத்திக்கும், துர் நாற்றத்திற்கும் இடமாயிருந்தது. இளைஞர்கள் ஒன்றரை மைல் நீளமான அவ்வடிகாலின்

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருமறை அறிவு மன்றம்

## க. பொ. த. ப. (சா) பரீட்சை - ரோ. க. கிறிஸ்தவம்.
## (2) சிறப்பு முன்னுரை.

### (இ) லூக்காஸ் சுவிசேசத்தின் நடையும் அமைப்பும்
### (Style and Structure of Lk's work)

லூக்காஸ் என்னும் சுவிசேசகர், கிரேக்க மொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்தார் — என்பதை அவரது புத்தகம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. உயர்ந்த ரகமான கிரேக்க மொழியில் அழகிய நடையில் எழுதப்பட்டிருக்கும் லூக்காஸ் சுவிசேசத்தின் ஆரம்பவசனம், எமக்கு இதைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. புதிய ஏற்பாட்டுல் வேறு எந்த இடத்திலும் காணமுடியாத எண்ணூறு கிரேக்க சொற்கள், லூக்காஸ் எழுதிய புத்தகங்களில் சிதறிக் கிடக்கின்றன. தாய்மொழியில் எழுதுவதைப் போன்று, மிகவும் அழகான நடையில், இலேசான முறையில், இவற்றை எழுதியுள்ளார்.

இவர் கிரேக்க மொழியில் மட்டுமல்ல, எபிரேய மொழியிலும், யூதருடைய பழக்க வழக்கங்களிலும், (Semitisms) போதிய அறிவைக் கொண்டிருந்தார். என்பதும் மறுக்க முடியாத ஓர் உண்மை. இவரது புத்தகத்தில், யூத முறைகளும், மரபுகளும் (Semitic Style audielisns) நன்ருகப் பாவிக்கிடக்கின்றன. இவரது காலத்தில், யூத-கிரேக்க சொற்களில் (Jewrsh Greek Vocabuliry) புணர்ச்சி ஏற்பட்டு மொழியில் ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டிருப்பதையும், நாம் அவதானிக்க முடிகிறது.

**மறைத்திரு. R. S. லோப்பு அடிகள்**

இவர் பழைய ஏற்பாட்டிலுள்ள புத்தகங்களை அறிந்தும் அவர் காலத்தில் நிலவிவந்த சிறந்த கிரேக்க எழுத்கு முறைகளை (Greek Litərauy Style) தெரிந்துமிருந்தார் என்பதை நாம் அறியமுடிகிறது. கிரேக்க மொழியிலிருந்த பழைய ஏற்பாட்டைக் கவனமாகப் பின்பற்றுகிருர். லூக்காஸ். ஒரு நிகழ்ச்சியை முற்றிலும் கூறிவிட்டு, அடுத்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுவது, லூக்காஸ் சுவிசேசகரின் வழமை. இவரின் சுவிசேசத்தில், ஆரம்ப அத்தியாயங்களில், இதை நாம் அவதானிக்க முடியும்.

பலஸ்தீன் நாட்டிற்கு வெளியிலுள்ளவர்களுக்கே, தம் சுவிசேசத்தை லூக்காஸ் எழுதிஞர் என்பது வெள்ளிடைமலை. பலஸ்தீன் நாட்டிலுள்ள பட்டினங்களைப் பற்றி விபரமாகக் கூறுகின்ருர். இவற்றிற்கு இடையிலுள்ள தூரங்களை விளக்கிச் சொல்லுகிருர். இவைகளெல்லாம் அந்த ஊர் மக்களுக்கு நன்ருகத் தெரிந்த விடயங்கள். (லூக்: 1,26: 2,4: 4,31: 9,26: 23,51: 24,13:) யூதர்களுடைய வாழ்க்கை முறைகளையும், பழக்க வழக்கங்களையும் (Jewish life and custom) விளக்கிக் கூறுகின்ருர். (லூக்: 22,1: 21,20:) பற்பல இடங்களில், லூக்காஸ், எபிரேய மொழிக்குப் பதிலாக, கிரேக்க மொழியைப் பாவித்திருக்கின்ருர். (லூக்: 6,15: அப்:பணி 1,13: லூக். 23,33.)

## சுவிசேசத்தின் அமைப்பு.
### LITERARY STRUCTURE

(A) ஜெருசலேம் தேவாலயத்திலிருந்து, கலிலேய திருப்பணிவரை

1. ஸ்நாபக அருளப்பரின் கிறீஸ்துவின் பிறப்பும் மறைந்த சீவியமும்: 1,5 – 2,52
2. கிறீஸ்துவின் பகிரங்க சீவியத்துக்கு ஆயத்தம்: 3,1 – 4,13
3. கலிலேயாவில் கிறீஸ்துவின் திருப்பணி: 4,14 – 9,50

(B) கலிலேயாவிலிருந்து ஜெருசலேமுக்கு பயணம்.

4. ஜெருசலேமுக்குப் பயணம்: 9,51 – 19,27

(C) கிறீஸ்துவின் கடைசிப் பாடுகளும், உத்தானமும் — ஜெருசலேமில்.

5. ஜெருசலேமில் திருப்பணி: 19,28 – 21,38.
6. கிறீஸ்துவின் கடைசிப் பாடுகள்: 22 – 23.
7. உத்தானத்தின் பின்பு: 24.

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயம் அளிக்கும்

# மன்னிப்பு (3)

## தொடர் கதை

தலைமையாசிரியரும் என்மேல்ப் பிரியமாக இருப்பவர். என்னைவிட வயதானவர். நல்ல அனுபவசாலி. சிறந்த அறிவாளி. இப்படிப்பட்டவர்களின் நன்மதிப்பைப் பெற்ற எனக்கு இந்தச்சம்பவம் எல்லா நற்பெயரையும் கெடுத்துவிடுமோ என்று கவலையாக இருந்தது. எனது உடுப்புகள் கசங்கி வேட்டிக்கரையில் செம்மண் ஈகும்பட்டிருப்பதையும், முகத்திலுண்டான கலவரத்தையும் பார்த்தவுடனே அவருக்குப் புரிந்துவிட்டது ''என்ன நடந்தது? ஏன் தாமதம்?'' என்று வகுப்பறையிலிருந்து வந்துகொண்டே கேட்டார். இவர் மூலமாக இதற்கு ஏதாவது வழி வகுக்கலாம் என்று எண்ணியவாறு நடந்த சம்பவத்தை முழுவதும் கூறினேன். எனது அளவுக்கு மீறிய அச்சத்தைக் கண்டு சிரித்துக்கொண்டு ''பயப்படாதே அவர்கள் வீட்டிற்கு நாம் சென்று சமாதானம் கூறிவிடுவோம். மேலும் அந்தக் குடும்பம் அப்படித் தப்பாக எண்ணக்கூடியவர்களல்ல. நமது குமரன் அந்தப் பெண்ணின் தம்பி. எனவே தைரியமாகக் கடமையைச் செய்'' என்றார். **குமரன்** அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஒரு மாணவன். எனவே பள்ளிக்கூடம் முடிந்ததும் தலைமையாசிரியருடன்அவர்கள் வீட்டுக்குப் போனேன் எங்களை மிகவும் மரியாதையுடன் வரவேற்றார் அப்பெண்ணின் தகப்பன் சின்னத்தம்பி. தலைமையாசிரியர் என்றால் அவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். சின்னத்தம்பியார் மாத்திரமல்ல அக் கிராமத்திலுள்ள அத்தனை பேருக்குமே பக்தி என்றுதான் சொல்லவேண்டும். கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை அன்று கண்முன்னே கண்டறிந்தேன். ''**சின்னத்தம்பியர்**'' என்று கிராமத்திலுள்ளவர்கள் மரியாதைக்கு பெயருடன் ஒரு 'யர்' சேர்த்து அழைத்ததால், அது நிலைத்து, எல்லோரும் இப்படியே அழைத்தனர். தலைமையாசிரியர் அவரிடம் விஷயத்தை விளக்கியபோது ''ஓமய்யா காலயில் புள்ள சொன்னாள். அதுக்கென்ன வேணுமெண்டு செய்ததா; ஏதோ தவறுதலா நடந்திற்று. மாஸ்டருக்கு அடிகிடி பட்டிற்ரு'' என்றார் எனக்கு இப்படி பேசியது சற்றுத் தைரியத்தைக் கொடுத்தது அது நடந்தபோது எனக்கிருந்த அவசரத்தை எடுத்துச் சொல்லி, குடத்துக்குரிய பணத்தை ஏற்கும்படியும் சொன்னேன். ''ஐயா பணம் பெரிதில்லை மனிசன்தான் பெரிசு'' என்று கூறி கடைசிவரை மறுத்துவிட்டார். ''அதுக்கில்லை, எங்களுக்கும் ஒரு கடமையுண்டல்லவா'' என்றேன். அதுவரை அந்தப் பெண்ணை எதிர்பார்த்தேன் கடைசிவரை அவள் வெளிவரவில்லை. அவள் தம்பி குமரன் மட்டுமே எங்களுடன் பேசினான். தலைமையாசிரியரும் பற்பல விஷயங்களைப் பேசிவிட்டு விடைபெற்றுக்கொண்டோம். அந்தப் பெண்ணை நேரில் சந்திக்க முடியவில்லையே என்று எனக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது. இந்தச் சம்பவத்தின் பின் என்னுடன் குமாரன் அடிக்கடி பேசும் வாய்ப்புக்கிட்டியது. எனக்கும் அவனுக்குமிடையில் ஐக்கியமான ஒரு மனப்பாண்மை ஏற்பட்டது. இதனால் அவர்கள் வீட்டுக்கு ஓய்வு நேரங்களில் போகவும், அவர்கள் குடும்ப வரலாற்றை அறிந்து கொள்ளவும் முடிந்தது.

சின்னத்தம்பியர் பட்டணத்தில் நூலகமொன்றில் காவலாளியாக வேலை செய்தவர். அவருக்கு ஒரே மகள் **கண்மணி**. ஆமாம் அந்தப் பெண்ணின் பெயர் கண்மணி. இவள் சிறுவயதிலேயே தன் தாயை இழந்து விட்டாள். தன்மனைவியின் பிரிவுத்துயரினால் சின்னத்தம்பியர் வேலையை விட்டுவிட்டார். வேலையைவிட்டாலும் கிராமத்தில் ஏகப்பட்ட நிலபுலன்கள் அவருக்கு இருந்தன. அன்றைய அவரதுமனநிலை கிராமச் சூழலையே விரும்பியது. மேலும் தனது ஒரே ஒரு செல்வ மகளை தனது நேரடிக்கவனத்தின்கீழ் வைத்து வளர்க்கவேண்டுமென்று விரும்பி மறுமணம் செய்யாமல் கிராமத்தில் குடியேறினார்.

ஆனால் அவர் நினைத்ததுபோலக் குழந்தையைக் கவனிப்பது அவ்வளவு இலகுவான வேலையாக இல்லை. பலதாலும் கஷ்டப்பட்டுக் களைத்துப்போய் விட்டார். அவரது உறவினர்களும் ''என்ன வயசா போயிற்று இன்னொன்றைச் செய்தால் இப்படிக் கஷ்டப்படத் தேவையில்லியே'' என்று வற்புறுத்தி வந்தனர். ''அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்'' என்பதுபோல மறுமணம் செய்வதில்லை என்றிருந்தவர், அதுபற்றிச் சிந்திக்க ஆரம்பித்தார். இதற்கேற்றவாறு ஊரவரும் நச்சரிக்கத் தொடங்கினார்கள். எல்லாம் சேர்ந்து அவரை மறுமணம் செய்யவைத்தது அதன் பின் குமரன் அவர்களுக்கு பிறந்தான். வழ-

[12ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மன்னிப்பு........**

[11ம் பக்கத் தொடர்ச்சி]

மையான சின்னம்மாவின் கெடுபிடிகளும் கண்மணிக்கு இருந்து கொண்டுதான் இருந்தன. இதுதான் அவர்கள் வரலாறு. இந்தச் சம்பவம் பற்றி ஒருநாள் எனது நண்பன் எட்வேட்டிடம் பேச்சு வாக்கில் கதைத்தபோது, "ஓ! அவளா? எனக்குத் தெரியும்" என்று சாதாரணமாக அவர்களை அறிந்தவன் போலப் பேசினன். எனக்கு இது வியப்பைக் கொடுத்தாலும், என்னை விட இந்த ஊரில் அதிக நாள் இருக்கிருன், அவனுக்குத் தெரியாமலா இருக்கும் என்று மனதைச் சமாதானம் பண்ணிவிட்டு, உனக்கெப்படித் தெரியும்?" என்றேன். அவர்கள் பழக்கம் எப்படிப்பட்டது என்று அறியும் நோக்கத்துடன்தான் இப்படிக்கேட்டேன். சின்னத்தம்பியர் எங்கள் 'டிப்பாட்மென்ற்' கொன்றக்றர் ஒருவருக்குத் தெரிந்தவர், இதனுல் எனக்கும் பழக்கம்" என்ருன். அத்துடன் எங்கள் பேச்சு அன்று வேறுபக்கம் திரும்பியது. அவர்கள் வீட்டிற்கு நான் போய்வரத் தொடங்கியதிலிந்து சின்னத்தம்பியருக்குப் பொழுது போக்கக் கூடிய பேச்சுத் துணையாகவும், குமரனுக்கு பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை கேட்டுத் தெரிந்து கொள்ள உதவியாகவும் முடிந்தது. சின்னத்தம்பியர் பட்டணத்திலிருந்து பழகியவர், எனவே அவருக்கு நிறைய விஷயங்கள் தெரிந்திருந்தது. எட்வேட் எனது நண்பன் என அறிந்ததும் மிகவும் சந்தோஷமடைந்து எங்கள் ஊருக்கும் வரவேண்டும் என ஆசைப்பட்டார்.

இத்தனை தூரம் அவர்களுடன் பழகினுலும், கண்மணியுடன் பேசம் வாய்ப்பு சில சந்தர்ப்பங்களில்த்தான் கிட்டியது. அதுவும் இரண்டொரு வார்த்தையுடன் நிறுத்திக் கொள்வாள். எனக்கு அவளுடன் நிறையப் பேசவேண்டும் போலிருந்தாலும், அவள் அளவோடு பழகியதால் மனந்திறந்து அவளுடன் பேசிப்பழக முடியவில்லை. கிராமப்புறப் பெண் தானே என்று சமாதானமடைந்தேன். ஆனுல் அவள் மனம் வேருெரு விஷயத்தில் லயித்திருப்பதை அன்று நான் உணர்ந்துகொள்ள வில்லை. ஒருவேளை அவளுடன் நெருக்கிப் பழகியிருந்தால் உணர்ந்திருக்கலாம். இதனுல் பின்பு நிகழ்ந்திருக்கும் இந்தச் சோக முடிவுகளை ஒருவேளை தடுத்துமிருக்கலாம் என நினைக்கிறேன். உடல் வளர்ச்சியையோ, தளர்ச்சியையோ தானுக நிவர்த்திசெய்ய முடியாத மனிதன், கடவுள் ஒருவனுக்கிட்ட கதியை நிவர்த்தியாக்கமுடியா? இது இறைவன் கட்டளை. ஒருமுறை குமரனுக்கு "பரிசுத்த வேதாகமம்" ஒன்றை பரிசளித்தேன். வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகள் இதில் அடங்கியுள்ளன. பலமுறை இதை வாசித்தால் இதன் பயனை அடையலாம்" என்று அதுபற்றிக் கூறினேன்.

ஒரு விஷயத்தில் ஆர்வத்துடன் உற்சாகமாகச் செயல்படும்போது, அதில் தவறு அல்லது பிரச்சினைகள் ஏற்பட்டால் முழுச் செயலுமே தடைப்பட்டுவிடும். மீண்டும் பழைய நிலையை அடைய சிறிதுநாள் செல்லும். எட்வேட் சின்னத்தம்பியர் வீட்டுக்கு அடிக்கடி போவதாகவும், கண்மணியைக் கலியாணஞ் செய்யப் போவதாகவும் அடிபட்ட வதந்தி என்னையும் இப்படி உற்சாகமாகச் செயல்படுவதைத் தடைசெய்து "இப்படியும் நடக்குமா"? என்று எனக்குள் பலவாறு சிந்தித்தும் விடைகாண முடியவில்லை. அவனையும், அவளையும் சேர்த்துச் சிந்திக்கவும் மனம்வரவில்லை. நண்பனையும் அவன் குடும்பஅந்தஸ்த்தையும் சின்னத்தம்பியர் குடும்பத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமாக இருந்தது. எப்படிப் பழகினுலும் ஏதோ ஒரு கிராமத்துப் பெண் தானே, கல்வி அறிவும் அவ்வளவு சிறப்பாக இல்லை. இவளை எட்வேட் விரும்புவானு? மேலும் கண்மணி இதற்கு ஒப்புக்கொள்வாளா! என்று என்னுல் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை. இது பொய்யான தகவலாக இருக்கலாம். கிராமத்தில் ஒருவர் அடிக்கடி ஓரிடத்திதுக்குப் போய் வந்தாலும் இத்தகைய வதந்திகள் வருவது சாதாரணம்தான் என எண்ணினுலும், மற்றப்பக்கம் நானுந்தான் அங்கு போகிறேன் வருகிறேன் இதைப் பற்றி இப்படியான கதை வரவில்லையே, 'நெருப்பில்லாமல் புகையாதல்லவா' ஏதோ காரணம் இருக்கத்தான் வேண்டும். இப்படியான பலவகை யோசனைகளிலும் மனம் அலைமோதியது. சின்னத்தம்பியர் வீட்டுக்குப் போவதும் சற்றுக் குறைந்து, அவளும் இது பற்றி எதுவும் பேசாதிருந்ததால், உண்மையை அறியமுடியவில்லை. [தொடரும்]

**தொண்டன் விநியோகஸ்தர்கள் கவனிக்கவும்.**

தொண்டன் விநியோகஸ்தர்கள் தொண்டனுக்குச் செலுத்தவேண்டிய பணத்தைப்பின்வரும் முகவரிக்குத் தாமதமின்றி அனுப்பிவைக்கவும். தொண்டனைத் தொடர்ந்து பிரசுரிப்பதற்கு உங்கள் ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகிறது. **தொண்டன் நிர்வாகி**, ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியத்தைப் படிப்போம்

## (1) இறைவன் அளித்த அரிய ஏடு.

பரந்த இப்பாருலகில் சிறந்து விளங்கும் புனித ஏடுகளில், தன்னிகரில்லாத் தனிப்பெருமை வாய்ந்ததும், பன் மொழிகளிலும் பெயர்த்தெழுதப்பட்டதும், காலம் கடந்த இறைவன் காலத்தில் எமக்களித்துள்ளதும், இறைவனைப்பற்றி இறைவனே எமக்கெடுத்தியம்பியவற்றைத் தன்னகத்தே கொண்டு, தரணியில் வாழும் அனைவர்க்கும் அன்பையும் அருளையும் அள்ளிக்கொடுக்கும் புனித ஏடு வேதாகமம் என்று அழைக்கப்படும் விவிலியமாகும்.

விவிலியம் என்னும் தலைப்பில் தொகுத்தளிக்கப்பட்ட இவ் ஏடு 72 நூல்களைக்கொண்டதாகும். இவைகளில் முதல் 45 நூல்களும் ஒழுங்காய் அமைக்கப்பட்டுப் பழைய ஏற்பாடு என அழைக்கப்படுகின்றன. மற்றைய 27 நூல்களும் ஒன்றாய் இணைந்து புதிய ஏற்பாடாக உருப்பெற்றுள்ளது.

விவிலியத்தின் இவ்விருபெரும் பகுதிகளான பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் மலரும் மணமும் போன்று, கடலும் அலையும் போன்று, நகமும் தசையும் போன்று ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. புதிய ஏற்பாட்டை நாம் புரிந்துகொள்வது பழைய ஏற்பாட்டின் அடிப்படையிலேதான்: பழைய ஏற்பாட்டிற்கு உயிரும் உருவமும் அளிப்பது புதிய ஏற்பாடேயாகும். இவை இரண்டும் ஒன்றாய் இணைந்து, இறைவன் எம்மீது கொண்டுள்ள அன்பையும், எம்மை இரட்சிக்க இறைவன் இவ்வுலகின் வரலாற்றிலே ஆற்றிய உன்னத செயலையும், பாவத்தினாலே பாருலகிற்கு ஏற்பட்ட இன்னல்களையும் எடுத்தியம்புகின்றன.

வேதாகமம் மனிதனை இறைவன் எவ்வாறு பாவத்தளையினின்று மீட்டார் எனும் நற்செய்தியினை எடுத்தியம்புகிறது. மேலும், கடவுள் தன்மக்களை எவ்வாறு வரலாற்றினூடாக வழிநடத்திச் செல்கிறார் என்பதையும் எமக்குரைக்கின்றது. புனிதமும் புதியதுமான முடிவற்ற வாழ்வைத் தவறிய மனிதனுக்கு இறைவன் அளித்த விதத்தை விவிலியம் எமக்கறிவிக்கின்றது.

விவிலியம் ஒரு புனித நூல். இதன் ஆதியும் அந்தமும் புனிதத்தின் உறைவிடமாய் விளங்கும் இறைவனேயாகும். அதன் செய்திகள் யாவும் மனிதனைப் பாவத்தினின்று விடுவித்து, புண்ணியமான பாதையில் நடத்திச் செல்வதையே கருத்தாய்க்கொண்டமைந்துள்ளன. இதற்கு விவிலிய நூலே சாட்சியாகும். ''மறைநூலில் உள்ளதெல்லாம் கடவுளால் ஏவப்பட்டுள்ளது. போதிக்கவும் கண்டிக்கவும், சீர்திருத்தவும், இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வில் மக்களைப் பயிற்றவும் பயன்படும் (2 திமோத்தேயு 3/16) என எடுத்துரைக்கிறது.

விவிலியம் இறைவன் எமக்களித்த புனித ஏடு என்பதற்குப் பழைய ஏற்பாட்டிலும் சான்றுகள் பல உள்ளன. ''நாம் உன்னை எவ்வித செய்தியைக் கூறும்படி கற்பிக்கின்றோமோ அவையனைத்தையும் பிரசித்தம் பண்ணுவாய்; ஆதலால், அவர்கள் முன்னிலையில் அஞ்சாதே. நாம் உன்னோடிருக்கிறோம்.'' (ஜெரமியா ஆகமம் 1/7–8) மேலும் கர்த்தர் ''மோயீசனை நோக்கி, இதை ஞாபகமாகப் புத்தகத்தில் எழுதி ஜோசுவா கேட்கும்படி வாசிப்போம்'' (யாத். 12/14) என யாத்திராகமம் கூறுகின்றது.

ஆதிகாலந்தொட்டுக் கிறிஸ்தவ உலகம் விவிலிய நூலைப் பொன்னெனப் போற்றி மதித்து வந்துள்ளது. ஏன், தங்கள் உயிரினும் மேலாக ஆதிக்கிறிஸ்தவர்கள் இதனைக் கருதி

**அருட்திரு. K. சுவாமிநாதன் அடிகள்.**

னார்கள். அதனாலன்றோ தியோக்கிளேசியன் (Diocletian) என்னும் கொடுங்கோலன் ரோமைப்பேரரசை ஆண்ட காலத்தில், கிறிஸ்தவ மதத்தை அடியோடு முற்றாக அழித்துவிட, கிறிஸ்தவர்களோடுகூட அவர்களின் அரிய ஏடாகிய விவிலிய நூலையும் எரித்துவிடுதல் ஒன்றே வழியென நினைத்து அதனை ஆற்ற முற்பட்டான். ஆனால், எத்

[16ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாகக்கோட்டைக்கு........

[8ம் பக்கத் தொடர்ச்சி]

கட்கு, அதாவது ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும்வரை (1815) நீடித்திருந்தது. இன்று, வாகக்கோட்டை இலங்கையின் பிரதான கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்ருக விளங்குகின்றது. புனித அந்தோனியாரின் பக்தர்கள் ஆண்டுதோறும் ஆனிமாதத்தில் அவருடைய திருநாளைக் கொண்டாடத் திரள்திரளாகவந்து, வழிபாடுகளில் ஈடுபட்டு, மன அமைதியோடும், சந்தோஷத்தோடும் வீடு திரும்புகின்றனர். இங்கு இப்போது ஓர் அழகான, விசாலமுள்ள புதிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. பக்தர்களுக்கு எல்லா வசதிகளும் உண்டு. திருச்சுருப ஊர்வலம் யானைகளோடு மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

தங்கள் விசுவாசத்தைப் பாதுகாக்க உதவி அளித்ததுபோல, திருமறையைப் பிற மக்கள் மத்தியில் பரப்பப் புனித அந்தோனியார் துணைபுரிவார் என்ற நம்பிக்கை வாகக்கோட்டைக் கத்தோலிக்க மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்துள்ளது. ஏனெனில், புனித அந்தோனியாரின் உதவியை நாடிக் கத்தோலிக்கர் மட்டுமல்ல, பெருந்திரளான பிறசமய மக்களுமே ஆண்டுதோறும் வாகக்கோட்டைக்கு வருகின்றனர்.

---

திருமறை அறிவு.......

[10ம் பக்கத் தொடர்ச்சி]

## விசேச நோக்கம்
### SPECIAL PURPOSE

லூக்காஸ், தமது சுவிசேசத்தை, முக்கியமாக யூதரல்லாத மக்களுக்காகவே எழுதினுர். கிறீஸ்துவின் வருகையானது, இஸ்ராயேல் மக்களின் சரித்திரத்தில், ஒரு கட்டம் மாத்திரமல்ல, உலகமக்கள் அனைவருக்கும், இது ஒரு அதிமுக்கியமான சம்பவம் என்பதை எடுத்துரைக்கின்ருர். குறிக்கப்பட்ட ஒரு சாதியாருக்கு மட்டுமல்ல, உலக மாந்தர் அனைவருக்கும் இரட்சணியத்தை (Universal Redemption) அடைந்து கொடுக்கவந்தார் கிறீஸ்து, என்பது இவரது கொள்கை. சத்திய வேதத்தில் புதிதாக வந்து சேர்ந்த மக்களுக்கு அவர்களின் திருமறை எவ்வளவு உறுதியான ஆதாரங்களைக் கொண்டுள்ளது என்பதை உணர்த்தவும், சத்திய வேதத்தின் தெய்வீக உண்மைகளை ஆழ்ந்து அறிய உதவி அளிக்கும் விசேச நோக்கத்தோடும் லூக்காஸ் தமது சுவிசேசத்தை எழுதினுர்.

காவிய வாழ்வு...........

[7ம் பக்கத் தொடர்ச்சி]

திருப்பார். இச்சாலை கடலின் வழி என அழைக்கப்பட்டது. இவ்வழியாகவே பயணிகளும் வணிகர்களும் எகிப்தில் இருந்து வந்தனர். இச்சாலையில் வைத்தே யோசேப் என்பவரை அவருடைய சகோதரர்கள் அடிமையாக எகிப்திய வியாபாரிகளுக்கு விற்றனர். அதே மலைகளின் உச்சிக்குச்சென்று தென்புலம் திரும்பாது வடபுலம் நோக்கியிருப்பாராஞல் 'Prolemais' என்னும் கடற்துறைமுகத்தை யேசு கண்டிருப்பார் மேலும் நேராக, கிழக்குத்திசையில் உள்ள பாத்தியா (Parthia) என்னும் தேசத்திற்கும், உரோமை நாட்டின் கடைசி எல்லைகளுக்கும் செல்லும் பரந்த சாலையையும் பாத்திருப்பார்.

இதே சாலையில், இன்னுமொருமுறை யேசு தம் கண்ணேட்டத்தைச் செலுத்தியிருப்பாராஞல் வணிகர்களையும், பயணிகளையும் பார்ப்பதோடு, பாரின் இறுதி எல்லைவரை தங்களது இராட்சியத்தைப் பரப்ப வேண்டுமென்ற நோக்கோடு உரோமை நாட்டின் எல்லைகளிலே நடமாடித்திரியும் அந்நாட்டுப் போர்வீரர்களைக் கண்டிருப்பார். மேலும் தென்வடபுலமாகத் திரும்புவதற்குப் பதிலாக கிழக்கு, மேற்கு நோக்கி அவர் திரும்பியிருப்பாராஞல் (Mediteeranean Sea) மத்தியதரைக்கடல் மூலமாக இத்தாலி, கிரேக்கம், ஸ்பானியா, பிரித்தானியா போன்ற நாடுகளுக்குப் பயணம் செய்யும் கலங்களையும் பார்த்திருப்பார்.

நசரேத்தில் கிறிஸ்து வாழ்ந்த காலை நானிலமே அவரது அடிநோக்கி நடைபோட்டது. தாம் வளர்ந்த அச் சிறிய ஊரின் மலைகளில் அவர் ஏறியிருந்தால் மேற்குறிப்பிட்ட எல்லாச் சாலைகளும் வீதிகளும் தம்மை நோக்கி வருவதை அவதானித்திருப்பார். சிறுவஞகிய யேசுவின் எண்ணங்கள் மிகமிக விரிந்தவை; ஆழமானவை. மேலும் அவருடைய இந்த இளம் வயதில் இறைவனுகுரிய ஓர் உலகத்தைப் பற்றி சிந்தித்திருக்க மாட்டார் என யார் கூறக்கூடும்.?

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிம்மதி

★

கடற்கரைக்குச் சென்று — அங்கு
சலந்து வரும் காற்றில்
உடல் தழுவ விட்டு — என்
உள்ளக் காயம் ஆற
தடவி ஒரு மருந்தை — துயர்
தணிக்கு மென நினைத் தேன்
கிடைத்ததுவோ ஏமாற்றம்! — மனக்
கிளர்ச்சியன்றி வேறில்லை!

திரைப்படத்தைப் பார்த்தால் - அமைதி
திரும்பு மென எண்ணி
ஒருபடத் தைப்பார்த் தேன் — அதில்
உள்ள பல நிகழ்ச்சிகள்
திருப்பி எனைத் தாக்க — நான்
திணறி மனம் மயங்கி
அரைப்படத் தில் எழுந்தேன் — மனதில்
அமைதி யென்பதில்லை!

தோழரோடு பேசினுல் — நெஞ்சில்
தோன்றுகின்ற கவலை யெலாம்
வீழ்ந்து விடு மென்றெண்ணி — நல்ல
விடயங்களைப் பேசிடினும்
ஆழ்ந்த மனக் கவலைகள் — எதுவும்
அகலாத காரணத் தால்
தாழ்ந்த தலை யோடு — என்
தலைவனடி சோந்தேன்.

கோயிலுக்குச் சென்று — அங்கு
குடியிருக்கும் இறைமனிடம்
வாயினுலும் செபித்தேன் — மன
வார்த்தையாலும் செபித்தேன்
தாயன்பு கொண்ட — அந்தத்
தலைவனவன் என்னைச்
சேயாக ஏற்று — என்
செபம் கேட்டான்; மகிழ்ந்தேன்!

—எஸ். அரியரெத்தனம்.

மட்டக்களப்பு மாநில........

[9ம் பக்கத் தொடர்ச்சி]

பெரும் பகுதியைத் துப்பரவு பண்ணினர். மதிய உணவை குளிர்ந்த காற்று ஓயாது வீசும் புனிதர் செபஸ்தியார் கோயில் குரு மனை மண்டபத்தில் அருந்தினேம்.

எமது அடுத்த நிகழ்ச்சி நேநீர் விருந்து புனித மிக்கேல் கல்லூரி மண்டபத்தில் நடை பெற்றது. விளையாட்டுக்களும் வேடிக்கை களும் இடம் பெற்றன. அதனைத் தொடர்ந்து இளைஞர்கள் ஊர்வலமாக மாநகரசபை மண்ட பத்திற்குச் சென்றனர்,

விழாவின் கலையரங்கத்திற்கு மாநகரசபை முதல்வர் ஜே. எல். திசவீரசிங்கம் தலைமை தாங்கிஞர். இரு ஆயர்களும் பல குருக்களும் கன்னியர்களும் கத்தோலிக்கப் பெருமக்களும் இளைஞர் குழாமும் சமுகமாயிருந்தனர். அருட் திரு எஸ். அரியரெத்தினம் எல்லோரையும் வரவேற்று உரையாற்றினுர். கலை நிகழ்ச்சி கள் திரு. கே. யேசுராஜனின் இறைவணக் கத்துடன் ஆரம்பமாகின. மட்டக்களப்பு வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றத்தினர் தயா ரித்த ''பங்குனி பதினைந்து'' என்ற சரித் திர நாடகம் கலையரங்கத்தினை சிறப்பித்தது.

★


## தொண்டன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா | (தபாற் செலவு உட்பட) | 3-50 |
| 6 மாதங்களுக்கு | (தபாற் செலவு உட்பட) | 2-00 |
| தனிப்பிரதி | ( ,, ,, ,, ) | -30 |

விளம்பர விகிதம்
(ஒருமுறை பிரசுரிப்பதற்கு)

| | | |
|---|---|---|
| 2 × 3 | அங்குலம் | ரூ. 10/- |
| 3 × 4 | ,, | ரூ. 20/- |
| 4 × 6 | ,, | ரூ. 30/- |
| 6 × 6 | ,, | ரூ. 40/- |
| 8 × 6 | ,, | ரூ. 50/- |

சந்தாக்களையும், விளம்பரங்களையும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தொண்டன் நிர்வாகி,
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாதருக்கோர் எடுத்துக்காட்டு மரியாள்

**செல்வி. வி. இன்பம் செபமாலை,**
பெரிய—உப்போடை, மட்டுநகர்.

சகல புண்ணியங்களுக்கும் அஸ்திவாரமும் காவலுமாய் இருப்பது தாழ்ச்சி என்னும் புண்ணியமே. ஏனெனில் ஒரு ஆத்துமத்தில் தாழ்ச்சியில்லாமல் வேறெந்தப் புண்ணியங்களாலும் ஒரு பலனுமில்லை. யேசுநாதரின் புண்ணியங்கள் அனைத்தையும் பின்பற்றியவள் மரியாள் ஒருத்தியே. எல்லா மாதர்களிலும் மேலானவளாகக் கருதப்பட்ட போதும் தன்னை உயர்ந்தவளாக பகிரங்கப்படுத்தாமல் தன்னைத்தானே தாழ்த்திக் கொண்டாள். எளியவன் ஒருவன் பிறர் தனக்குக் கொடுத்த உயர்ந்த விலையுள்ள ஆடையைத் தரித்திருக்கையில் அதனால் அகங்காரம் கொள்ளாமல் தனக்கு உபகாரம் செய்தவனுடைய சமுகத்தில் அவனுடைய நன்கொடையால் தனது எளிமையை அறிந்து கொண்டு, தன்னைத் தாழ்த்துவானல்லோ? அதுபோல மரியாளும் வரப்பிரசாதத்தாலும், புண்ணியத்தாலும் எவ்வளவு உயர்ந்தவளாக இருந்தாலோ, அவ்வளவாகத் தன்னைத் தாழ்த்தித்தான் எல்லாவற்றையும் இறைவனிடம் இருந்து பெற்றுக் கொண்டதாக ஞாபகப்படுத்திக் கொள்வாள். ஆகையால், மரியாள் தன்னை மகா நீசமுள்ளவள் என்றே எண்ணுபவள் என்று அவளின் செய்கைகளால் அறியமுடிகிறது. பூலோகத்தில் மரியாளைப்போன்றவர்கள் எவரும் இல்லையானதால், இவளைப் போன்ற தாழ்மையானவள் வேறெவரும் இல்லையென்றே கூறல் வேண்டும். பிறர் சொல்லும் தோத்திரங்களை அங்கீகரியாமல் அவையெல்லாஞ் ஆண்டவருக்குரியதென்று ஒப்புக்கொடுப்பது தாழ்ச்சியின் இலட்சணம் தானே. இது எலிசபெத்தம்மாள் தேவ தாயை வாழ்த்தியபோது மரியாள் இவை யாவும் சுவாமிக்கே உரியதென்று ''என் ஆத்துமம் ஆண்டவரை மகிமைப்படுத்துகிறது'' என்றுபாடினாள். மேலும் மரியாள் தன்னால் ஒன்றும் செய்ய இயலாதென அறிந்தமையினாலேயே தாழ்ச்சியைக் கடைப்பிடித்து, தனக்கு வேண்டியவற்றைத் தேடிக் கொண்டாள். பிறருக்குப் பணிவிடை செய்ய விரும்புகிறதும் தாழ்ச்சியின் இலட்சணம் தானே. மரியாள் மூன்றுமாத காலம் எலிசபெத்திற்கு ஊழியம் செய்யப் போனாள். மரியாள் தாழ்ச்சி என்னும் போர்வையில் எம்மை வைத்துக் காக்கின்றாள். கடைசியாகத் தாழ்ச்சியுள்ளவர்கள் நிந்திக்கப்பட விரும்புவார்கள். மேலும் யேசுநாதர்நாமே கூறியுள்ளார் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே உயர்த்தப் படுவான். எனவே, மரியாளைப் போன்று தாழ்ச்சி எனும் புண்ணியத்தைக் கைக்கொண்டு அவளைப்போன்று உன்னத நிலையிலிருக்க முயல்வோமாக.

✽

**விவிலியத்தைப்........**

[13ம் பக்கத் தொடர்ச்சி]

தனையோ கிறிஸ்தவர்கள் எல்லையற்ற இன்னல்கள் அனுபவித்து, விவிலிய ஏட்டைக் காப்பாற்ற முன்வந்தனர். அதற்கெனத் தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயங்கவில்லை. ''எங்களைக் கொள்ளுங்கள், ஆனால் எங்கள் இறைவன் அருளிய இப் புனித ஏட்டை மட்டும் அழித்துவிடாதீர்கள்'' எனப் பறைசாற்றவும் பயப்படவில்லை. இவ்வாறு திருச்சபையின் வரலாற்றிலே விவிலிய நூல் எக்காலமும் தனிப்பெரும் சிறப்பைக் கொண்டதாய் இருந்துவந்துள்ளது. அதுவலன்றே இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம்கூட எமக்களித்துள்ள 16 கொள்கைத் தொகுப்புக்களையும் விவிலிய நூலின் அடிப்படையிலே அமைத்துள்ளது. மேலும் விவிலிய நூலின் சிறப்பினை எமக்கெடுத்தியம்ப வேண்டுமென்று, ''இறைவெளிப்பாடு'' என்னும் தலைப்பில் தனியொரு கொள்கைத் திரட்டையும் விடுத்துள்ளது,

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S.J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். வ. தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு அவர்களால் 1-6-70ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media